# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 903/F/2024**

திரு.செ.பரந்தாமன் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கண்காணிப்பாளர்),
உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம்,
ஊரக வளர்ச்சி துறை,
செங்கல்பட்டு மாவட்டம்-603 002. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.செ.பரந்தாமன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.கி.வே.சீனுவாசன், கண்காணிப்பாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(பொறுப்பு), உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம், ஊரக வளர்ச்சி துறை, செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ், 14/10/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் உதவி இயக்குநர் தணிக்கை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அரசு சார்ந்த பொது ஆவணங்கள் பெயர் பட்டியல் என்பன போன்ற 6 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 06.11.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தனக்கு சரியான தகவல்

வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் 12.02.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 06.11.2023 மற்றும் 27.02.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் சரியான தகவலை பெற்றுத்தருமாறு கோரினார்.

5. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவில் கோரியுள்ள படி மனுதாரர் பொது அதிகார அமைப்பை நேரில் சென்று களஆய்வு செய்து தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் பெற்றுக்கொண்டதை உறுதி செய்தும் பொதுத்தகவல் அலுவலரால் 06.11.2023 மற்றும் 27.02.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை **உறுதி செய்தும் இந்த புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 903/F/2024**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுதகவல் அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கண்காணிப்பாளர்),
உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம்,
ஊரக வளர்ச்சி துறை,
செங்கல்பட்டு மாவட்டம்-603 002.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.பரந்தாமன்,
121/3, படவேட்டம்மன் கோவில் தெரு,
நடுவக்கரை கிராமம்,
பட்டரைக்கழனி அஞ்சல்,
திருக்கழுக்குன்றம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்-603102.

Copy to file: KR/PA